டால்பின்

DOLPHIN ®
Primary Books

# சுந்தரத்தமிழ் இலக்கணப் பயிற்சி

நூல் தொடர்



8

# இலக்கணம்

நம் கருத்துகளைப் (எண்ணங்களைப்) பிறர் அறியவும், பிறர் கருத்துகளை (எண்ணங்களை) நாம் அறியவும் உதவுவது மொழியாகும். மொழியைச் செம்மையாகப் பேசவும், எழுதவும் துணைபுரிவது இலக்கணமாகும். இலக்கணம் மொழியின் அமைப்பையும் அழகையும் உணர்த்துகிறது.

எள்ளிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போன்று இலக்கியங்களிருந்து எடுக்கப்படுவது இலக்கணமாகும்.

அமிழ்தினும் இனியது நம் செம்மொழியாம் தமிழ்மொழி "உயர்தனிச் செம்மொழி" என உலகோர் உயர்த்திக்கூறும் தன்மை உடையது. முன்னைப் பழமைக்கும், பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் சிறப்புடையது. ஆகவே தான் நம் அருந்தமிழ்ப் புலவர்கள் ஐந்திலக்கணத்தினைப் படைத்துள்ளனர். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவை ஆகும்.

## 1. எழுத்து இலக்கணம்

எழுத்தின் வகைகள்:

எழுத்து
- முதல் (30)
  - உயிர் (12)
    - குறில் (5)
    - நெடில் (7)
  - மெய் (18)
    - வல்லினம் (6)
    - மெல்லினம் (6)
    - இடையினம் (6)
- சார்பு
  1. உயிர்மெய் - 216
  2. ஆய்தம் - 1 (ஃ)
  3. உயிரளபெடை
  4. ஒற்றளபெடை
  5. குற்றியலிகரம்
  6. குற்றியலுகரம்
  7. ஐகாரக்குறுக்கம்
  8. ஔகாரக்குறுக்கம்
  9. மகரக்குறுக்கம்
  10. ஆய்தக் குறுக்கம்

### ஆங்கிலப் பழமொழிகள் அறிவோம்

1. A friend in need is a friend indeed.

நண்பனை ஆபத்தில் அறியலாம்.

2. Old is Gold

பழமையே பெருமை.

3. Knowledge is power.

அறிவே ஆற்றல்.

## 2. தகுதி வழக்கு

தகுதியற்ற சொற்களைப் பேச வேண்டி வரும்போது அவற்றை நீக்கி அப்பொருள் வருமாறு வேறு சொற்களால் கூறுவது தகுதி வழக்கு எனப்படும். இது மூவகைப்படும். அவை

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி ஆகியனவாகும்.

பலர் முன்னே கூறுவதற்கு இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால் தெரிவிப்பது இடக்கரடக்கல் எனப்படும்.

(எ.கா) வாய்கழுவி வந்தேன் என்பதை வாய்பூசி வந்தேன் எனக் கூறுதல்

அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் வழங்குவது மங்கலம் எனப்படும்.

(எ.கா) இறந்தாரை இறைவனடி சேர்ந்தார் எனக்கூறுதல்.

ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில் குறிப்பாக வழங்கும் பெயர் குழூஉக்குறி எனப்படும்.

(எ.கா) பொற்கொல்லர் பொன்னைப் "பறி" என்பர்.

வேடர் கள்ளைச் "சொல்விளம்பி" என்பர்

### ஆங்கிலப் பழ மொழிகள்

1. Work is Worship.
   செய்யும் தொழிலே தெய்வம்.
2. Health is Wealth.
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
3. Failure is the stepping stone to success.
   தோல்வியே வெற்றிக்கு முதற்படி.

### மரபுச் சொற்கள் – பயிற்சி

காய்களின் இளநிலைகளை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அவரை | .................... | வாழை | .................... |
| தென்னை | .................... | முருங்கைப் | .................... |
| மா | .................... | வெள்ளரிப் | .................... |
| கத்தரி | .................... | பனை | .................... |

தேதி : .....................



ஆசிரியர் கையொப்பம் : .....................

## 8. ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி, தொன்று தொட்டு வழங்கி வருவது ஆகு பெயர் எனப்படும்.

(எ.கா) இந்தியா வென்றது. இந்தியா என்பது இந்திய வீரர்களைக் குறிக்கின்றது.

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவை :

1. பொருளாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. காலவாகுபெயர்
4. சினையாகு பெயர்
5. பண்பாகு பெயர்
6. தொழிலாகு பெயர்
7. தானியாகு பெயர்
8. உவமைஆகுபெயர்
9. கருவியாகு பெயர்
10. கருத்தா ஆகு பெயர்
11. காரியவாகுபெயர்
12. சொல்லாகு பெயர்
13. எண்ணல் அளவை ஆகுபெயர்
14. எடுத்தல் அளவை ஆகுபெயர்
15. முகத்தல் அளவை ஆகுபெயர்
16. நீட்டல் அளவை ஆகுபெயர்

அவற்றுள் முதல் ஆறு ஆகுபெயர்களை மட்டும் தெரிந்து கொள்வோம்.

### 1. பொருளாகு பெயர் (முதலாகு பெயர்) :

ஒரு முழுப் பொருளின் பெயர் அதனைச் சுட்டாது, அதன் உறுப்புக்கு ஆகி வருவது பொருளாகு பெயர் எனப்படும். இதனை முதலாகு பெயர் எனவும் கூறுவர். (எ.கா) கண்ணகி மல்லிகை பறித்தாள்.

### 2. இடவாகு பெயர் :

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்திலுள்ள பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயர் எனப்படும். (எ.கா) கூடைப் பந்தாட்டத்தில் ஈரோடு வென்றது.

### 3. காலவாகு பெயர்:

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும். (எ.கா) கயல்விழி மார்கழி சூடினாள்.

### 4. சினையாகு பெயர் :

ஒரு சினையின் (உறுப்பின்) பெயர் அதனோடு தொடர்புடைய முழுப்பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும். (எ.கா) ஆசிரியர் தலைக்கு ஒரு பழம் தந்தார்.

### 5. பண்பாகுபெயர் (குணவாகு பெயர்)

பண்புப் பெயர், அப்பண்பைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இதனை குணவாகு பெயர் எனவும் கூறுவர் (எ.கா) கண்ணன் இனிப்பு வழங்கினான்.

### 6. தொழிலாகு பெயர் :

தொழிற்பெயர், அத்தொழிருந்து பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.(எ.கா) வளவன் அவியல் உண்டான்.

# 13. புணர்ச்சி

(உயிரீறு, மெய்யீறு, உடம்படுமெய்)

1. உயிரீறு :

நிலைமொழியின் ஈற்றெழுத்து உயிரெழுத்தாய் அமைவது உயிரீறு எனப்படும்.

(எ.கா) அ + நாடு = அந்நாடு

சொற்களின் கடைசி எழுத்து உயிர்மெய் என்று இருந்தாலும் அதனை உயிர் ஈறாக சொல்லுதல் வேண்டும். (எ.கா) பல, பலா, கனி, தீ

பல = ல் + அ (உயிரீறு)

பலா = ல் + ஆ (உயிரீறு)

உயிரெழுத்து ஈற்றுச் சொல் முன் வல்ன எழுத்துகள் வந்தால் அதன் மெய்யெழுத்து மிகும்.

(எ.கா) பூ + தொடை = பூத்தொடை

களா + காய் = களாக்காய்

பு + பல் = புப்பல்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் வித வாதன மன்னே
– நன்னூல்: 165

2. மெய்யீறு

நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்து வந்து, வருமொழி முதல் உயிரெழுத்து வந்தால் இரண்டும் இணைந்து உயிர்மெய்யெழுத்தாக மாறும். இதற்கு மெய்யீற்றுப் புணர்ச்சி என்று பெயர். மெய் தனித்து இயங்காது, உயிருடன் சேர்ந்து இயங்குவதே இயல்பு.

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
– நன்னூல் : 204

உடல் – மெய்

(எ.கா) தேர் + ஓடு = தேரோடும்.

மேல் + ஆடை = மேலாடை

மரம் + ஏறினான் = மரமேறினான்.

நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்துவரும் மெய்யெழுத்துக்கு முன் வருமொழி முதல் உயிர் வந்தால் நிலைமொழியின் ஈற்று மெய் இரட்டித்து இணையும்.

(எ.கா) விண் + உலகம் = விண்ணுலகம்

(விண் + ண் + உலகம்)

மின் + ஒளி = மின்னொளி

(மின் + ன் + ஒளி)

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்
– நன்னூல் : 205

## பன்முறை எழுதிப்பழகு

Complete range of DOLPHIN products available online at:
amazon.in

கீழ்கண்ட எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | டு | மா | ல் | கா | ரு | ம் | பு | தி |
| ப் | ணி | மா | லை | இ | ண் | ப | ழி | வ | மி |
| பா | ட | ல் | சி | ரி | ய | ர் | ஆ | ட் | ழ் |
| ளி | ம் | ன | கை | வ | ச | சை | நா | கு | மை |
| | | | | | | | | | |

சொற்களை உருவாக்க தேவையான எழுத்துகளை கட்டங்களில் நிரப்பிக் கொள்ளவும்.

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

இனியப் பேனா பயன்படுத்தவும்.

ISBN 978-93-83753-16-1

Designed, Printed & Published By :
**Sekar Publishers**
An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road, Sivakasi - 626189 Tamilnadu - India.
Tel : +914562 274132 Email: sekarpublishers@gmail.com

DOLPHIN® Primary Books

Log on to: www.dolphinprimarybooks.com